# ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா (TISL)

## தேசிய நேர்மைத்திறன் விருதுகள் 2010

**ஐக்கிய நாடுகள் ஊழல் எதிர்ப்பு தின நிகழ்வை ஒட்டியது**

## பிரேரிப்புகளுக்கான வழிகாட்டல்கள்

### தேசிய நேர்மைத்திறன் விருது (NIA)

பொது ஈடுபாட்டில் அபரிமிதமான நேர்மைத்திறனை வெளிப்படுத்திய தனிநபர்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு வருடாந்தம் வழங்கப்படும் தேசிய நேர்மைத்திறன் விருதானது, TISL இனால் தொடர்ந்தும் ஏழாவது தடவையாகவும் வழங்கப்பட இருக்கின்றது.

2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் தேசிய நேர்மைத்திறன் விருதானது ஒன்பது(9) பேர்களினால் இதுவரையில் வெற்றி கொள்ளப்பட்டுள்ளதுடன் துறையில் சிறந்த பங்களிப்புக்காக நான்கு(4) பேருக்கு “சிறப்புப் பிரேரிப்பு விருதுகள்” வழங்கப்பட்டன. வெற்றியாளர்களில் அரசாங்க உயரதிகாரிகள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளடங்குவர்.

விருது பெறுநர்கள், போட்டித்தன்மை மிக்க செயன்முறையொன்றின் ஊடாக இறுதித் தீர்மானமொன்றை எடுக்கவேண்டிய கௌரவமான தனித்தன்மைகளைக் உடைய சுயாதீனமான நடுவர் குழாமொன்றினால் தெரிவுசெய்யப்பட்டனர்.

**01) பிரேரிக்கப்படுபவர்கள் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்**

i. பிரேரிக்கப்படுபவர்கள் கட்டாயமாக இலங்கையில் ஊழலைக் குறைப்பது அல்லது ஊழலைத் தடுப்பது தொடர்பில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்ற செயலை/செயல்களைச் செய்திருக்க வேண்டும். *(ஊழலின் தன்மை தொடர்பாக அறிந்துகொள்ள பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்)*

ii. அத்தகைய செயல்/செயல்கள், உள்ளூரிலும் அல்லது சர்வதேச அளவிலும் முன்மாதிரியானதாக அல்லது அங்கீகாரம்பெற்ற செயல்/செயல்களாக இருக்குமாயின், மிகவும் உகந்தது.

iii. அத்தகைய செயல்/செயல்கள், ஊழலைக் குறைப்பதற்கான முன்னோடியான, புதுமையான நம்பிக்கையூட்டும் ஒரு செயலாக/ செயல்களாக இருக்க வேண்டும்.

iv. குறித்த செயல்/ செயல்கள், ஊழலைக் குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்காகச் செயலாற்றுவது சம்பந்தமாக நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

v. மறைந்த ஒருவர் சார்பாக முன்வைக்கப்படும் பிரேரிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 02) பிரேரிப்புகளுக்குத் தகுதி அற்றவர்கள்

பின்வரும் நபர்கள்/நிறுவனங்கள், TISL இன் தேசிய நேர்மைத்திறன் விருது பெறத் தகுதி அற்றவர்களாகக் கொள்ளப்படுவர்:-

*i.* TISL இன் மதிப்பீடுகள், கொள்கைகளுக்கு மாறுபட்ட வகையில் செயற்பட்ட தனிநபர்கள்/நிறுவனங்கள். *(தயவுசெய்து பின்னிணைப்பு 02 ஐப் பார்க்கவும்)*

*ii.* TISL இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், நேர்மைத்திறன் விருது வழங்கல் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் TISL இலிருந்து ஊதியம்பெறும் பணியாள்தொகுதி அங்கத்தவர்கள். *(TISL இன் பல்வேறு செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்களாக இருந்த எந்தவொரு நபரையும் தேசிய நேர்மைத்திறன் விருதுக்கு பிரேரிப்பதில் எந்தத் தடையும் இல்லை.)*

### 03) பிரேரிப்பு நடைமுறை

i. இவ்வழிகாட்டல்களுக்கமைவாக எவரேனும் தனிநபரால் அல்லது நிறுவனங்களால் பிரேரிப்புகள் முன்வைக்கப்படலாம். சுய பிரேரிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ii. விருது வழங்கல் குழு அங்கத்தவர்கள் அல்லது TISL இல் பணிபுரிவோர் எவரேனும் பிரேரிப்புகளை முன்வைக்க முடியாது. *(எவ்வாறாயினும், விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்பொழுது, அது தொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப்படின், TISL இன் உதவியை நாடலாம்)*

### 04) பிரேரிப்புப் படிவம்

முழுமையான, திருத்தமான பிரேரிப்புப் படிவமொன்று பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்:

i. பிரேரிக்கப்படுபவரின் முழுமையான சுய விபரக்கோவையுடன் சுருக்கமான தனிப்பட்ட விபரங்கள்

ii. பிரேரணையை முன்மொழிவதற்கான கடிதமும் பிரேரிக்கப்படுபவர் ஏன் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை உள்ளடக்கிய 250 சொற்களுக்கு மேற்படாத முன்மொழிவு விவரணமொன்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டும்.

iii. பிரேரிக்கப்படுபவரினால் பூர்த்திசெய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட சம்மதத்தை வெளிப்படுத்தும் படிவம் *(தயவுசெய்து பின்னிணைப்பு 3 இல் உள்ள சம்மதப் படிவத்தைப் பார்க்கவும்)*

- இறந்த ஒருவரின் பிரேரிப்புக்கு உடனடி குடும்ப அங்கத்தவரின் சம்மதம் வேண்டப்படுகிறது. அத்தகைய நபர் இல்லாதவிடத்து அடுத்த நிலையிலுள்ள குடும்ப அங்கத்தவர் சம்மதம் தெரிவிக்கலாம்.

iv. பிரேரிக்கப்படுபவரினால் ஒப்பமிடப்பட்ட நேர்மைத்திறன் சத்தியப் பிரமாணம் *(தயவுசெய்து பின்னிணைப்பு 4 ஐப் பார்க்கவும்)*

***உரிய விதத்தில் பூர்த்தி செய்யப்படாத பிரேரிப்பு விண்ணப்பப் படிவங்கள் விருது வழங்கலுக்கு பரிசீலிக்கப்பட மாட்டா.***

## 05) பிரேரிப்புகளைச் சமர்ப்பித்தல்

**பிரேரிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி - 2010 ஆகஸ்ட் 31.**

விருதுக்கு கருத்திலெடுக்கப்படுவதற்காக பிழையின்றி பூரணப்படுத்தப்பட்ட பிரேரிப்புப் படிவம் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் TISL க்கு கிடைக்கக்கூடியதாக தபால் அல்லது மின்னஞ்சல் ஊடாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் *(தயவுசெய்து பின்னிணைப்பு 5 ஐப் பார்க்கவும்)*

***தேசிய நேர்மைத்திறன் விருதுகள் - 2010***
***ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா***
***28/1, புள்ளர்ஸ் ஒழுங்கை,***
***கொழும்பு 07.***

***தொலைபேசி: 011-5627432***
***தொலைநகல்: 011-2592287***
***மின்னஞ்சல் nia@tisrilanka.org***

***தாமதித்துக் கிடைக்கும் பிரேரிப்புகள், விருது வழங்கலுக்குப் பரிசீலிக்கப்பட மாட்டாது.***

## 06) விருது வழங்கல் குழு

i. சமூகத்தில் பெரு வரவேற்புள்ளவர்களும், உயரிய நேர்மைத்திறன் உடையவர்களுமாகிய மூன்றுக்குக் குறையாத நபர்களை "விருது வழங்கல் குழு" உறுப்பினர்களாக TISL நியமிக்கும். இக்குழுவானது பின்னர் ஒரு தலைவரை அல்லது இணைத் தலைவர்களைத் தெரிவு செய்யும்.

ii. இந்தக் குழு, தேர்வு நடைமுறையில் உயர்ந்தபட்ச நேர்மைத் திறன் நியமங்களைப் பின்பற்றும்.

iii. பிரேரிப்புகளைக் கோருவதில் TISL இன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் TISL பணியாள் தொகுதியினரும் இக்குழுவிற்கு உதவுவர். பிரேரிப்புகளைப் பரிசீலிக்கும்போது இக்குழுவானது பிரேரிப்புகள் தொடர்பான தகவல்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள TISL இன் உதவியை நாட முடியும்.

iv. கீழ்க்குறிப்பிடப்பட்ட வழிகாட்டி 8 இற்கமைவாக விருதொன்றானது எதிர்காலத்தில் குழுவொன்றினால் மீளப்பெறக் கருதப்படும் சந்தர்ப்பம் ஒன்று தவிர்ந்தவிடத்து, விருது வழங்கல் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

## 07) விருது வழங்கல் குழுவின் உரிமைகளும் தத்துவங்களும்

விருது வழங்கல் குழு பின்வருவனவற்றைச் மேற்கொள்ள பூரண உரித்துடையது:-

i. பிரேரிப்புகளை கோருவதற்கு முன்னர் தற்போதுள்ள பிரேரிப்பு வழிகாட்டல்களை வருடாந்தம் மீளாய்வுசெய்து மாற்றியமைப்பதற்கும்,

ii. தற்போது செயல்வலுப்பெறும் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கும் பிரேரிப்புகளை மதிப்பீடு செய்வதற்கான நடைமுறைகளைத் தீர்மானிப்பதற்கும்,

iii. ஒரு குறிப்பிட்ட பிரேரிப்பின்பொழுது அக்கறை முரண்பாடொன்று எழுமாயின், அச்சந்தர்ப்பத்தில் விருது வழங்கல் குழுவின் உறுப்பினர்கள் வாக்களிப்பதன் மூலம் விருப்பை வெளிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க முடியும்.

iv. பிரேரிப்பை முன்மொழிபவரிடமிருந்து பிரேரிப்பு ஆவணங்களை இணைப்பதற்கான மேலதிக தகவல்களைக் கோருதற்கும், அவசியமானதெனக் கருதப்படும் புலன் விசாரணைகளில் ஈடுபடுவதற்கும், வழங்கப்படும் தகவல் போதுமானதன்று எனக் கருதப்படுமிடத்து பிரேரிப்பை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் புறக்கணிப்பதற்கும்,

v. பிரேரிக்கப்பட்டவர் பற்றிய விபரங்களின் உண்மைத் தன்மையைக் கண்டறிதற்காக அவர் சார்ந்த நிறுவனத்திற்கு/ அவர் இருக்கும் இடத்திற்கு நேரில் சென்று அவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், தேவையான மேலதிக ஆதாரங்களை பெறும் வகையில் ஒழுங்கமைப்பதற்கும்,

vi. இறுதிச் சுற்றுத் தேர்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலைப் பகிரங்கப்படுத்துவதற்கு / வெளிப்படுத்துவதற்கும்,

vii. விருதுக்காக (2 நபர்களுக்கு/ நிறுவனங்களுக்கு மேற்படாத வகையில்) மிகப் பொருத்தமான விண்ணப்பதாரரைத் தெரிவுசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்.

viii. பிரேரிப்புக்கள் உரிய நியமங்களைக் கொண்டிராதபட்சத்தில் விருது வழங்காமல் தவிர்ந்திருப்பதற்கும்,

ix. விருது வழங்கல் குழுவானது இரண்டு வெற்றியாளர்களுக்கு மேலதிகமாக, சிறப்பு விருதுக்கென ஒருவரைச் சிபார்சு செய்வதற்கும்,

x. கீழ்க்காணும் வழிகாட்டல் இல. 8 இன் பிரகாரம், விருதை மீளப் பெற்றுக்கொள்வதற்கும்.

## 08) வழங்கிய விருதை மீளப் பெற்றுக்கொள்ளல்

8.1 விருது தெரிவுக் குழு, பின்வரும் காரணங்களால் ஏற்கனவே வழங்கிய விருதொன்றை கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

(i) முன்பு விருதுபெற்ற வெற்றியாளரின் பிரேரிப்பில் உண்மைக்கு அப்பாற்பட்ட /மறைக்கப்பட்ட தகவல்கள் இருந்து பின்னர் நிரூபணமாகும் ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது

(ii) விருதுபெற்ற வெற்றியாளர், TISL இன் நோக்கு, பணித்திட்டத்திற்கு முரணான வகையில் செயலாற்றுகின்றாராயின்.

8.2 இருப்பினும் விருது வழங்கல் குழு, விருதை மீளப் பெறுவதற்கு முடிவெடுக்க முன்னர், அது சம்பந்தமான தேவையான எல்லாத் தகவல்களையும் கட்டாயமாக திரட்டிக் கொள்வதுடன் விருதுபெற்ற வெற்றியாளரின் அபிப்பிராயங்களுக்கும் இடமளிக்க வேண்டும்.

8.3 மேற்கூறிய காரணங்களால், முன்னர் வழங்கிய விருதை இரத்துச்செய்ய முடிவெடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகுமாயின், TISL இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் விருது வழங்கல் குழுவுக்கு வேண்டுகோளொன்றை முன்வைக்க சமர்ப்பிக்க வேண்டும். விருது வழங்கல் குழு அவர்களின் தீர்மானத்திற்கான காரணங்களை எடுத்து விளக்கும். இ விருது வழங்கல் குழு தமது தீர்மானம் தொடர்பில் காரண விளக்கம் அளிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், காரண விளக்கமளிக்காமல் விருதை இரத்துச்செய்வது சம்பந்தமாக முன்வைத்த கோரிக்கையைத் மறுக்கவும் முடியும்.

## 09) முடிவுகளை அறிவித்தல்

2010 டிசம்பர் 9 ஆம் திகதியன்று BMICH இல் அல்லது பின்னர் தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனுமொரு இடத்தில் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை ஒட்டியதாக நடைபெறும் தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் நிகழ்வில் விருதுகள் வழங்கப்படும். (மேலும் முன்னர் வழங்கிய விருதை இரத்துச்செய்ய வேண்டியிருந்தால், அதன் முடிவுகளும் இச் சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்படும்)

முன் ஆயத்தங்களுக்கு காலம் அவசியமானது என்பதால் குறைந்தபட்சம் டிசம்பர் மாதம் 09 ஆம் திகதிக்கு 03 வாரங்களுக்கு முன்பாவது தெரிவுசெய்யப்பட்ட விருதுபெறுநர்கள் பற்றி TISL க்கு அறிவிக்கப்பட வேண்டும்.

*பின்னிணைப்பு 1*
*பகுதி "அ"*

## ஊழலின் பல்வேறு பக்கத்தோற்றங்கள்

ஊழல் தொடர்பில் முற்றுமுழுதான, உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியானதொரு வரைவிலக்கணத்தை முன்வைப்பது சிரமமானது. "ஊழல்" எனும் பதமானது பல பொருள்களைத் தருவதுடன், பல்வேறு விதமாக வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

**"ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை தனிப்பட்ட நலனுக்காகத் துஷ்பிரயோகம் செய்தல்"** என்பதே ஊழலுக்கான உலகளாவிய ரீதியில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை வரைவிலக்கணமாகும்.

### எத்தகைய மட்டங்களில் ஊழல் இடம்பெறுகிறது?

### பாரியளவான, சிற்றளவான ஊழல்:

இவ்வகையான ஊழலானது ஒரு நாட்டின் நல்லாட்சி, சட்டவாட்சி, பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றின் மீதான நம்பகத்தன்மையைப் பெருமளவுக்கு சீரழிக்கும்.

சிற்றளவான ஊழல் என்பது கனிஷ்ட நிலை பதவிகளுக்கு தமது நண்பர்களையும் உறவினர்களையும் நியமிப்பதற்கு அல்லது சுய விருப்பின் பேரில் வழங்கப்படுகின்ற பண ரீதியான கொடுப்பனவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய மிகச் சிறியளவிலான பணப் பரிமாற்றங்களை உள்ளடக்கியதாகும்.

பாரியளவான ஊழலுக்கும் சிற்றளவான ஊழலுக்கும் இடையிலான மிக முக்கிய வேறுபாடு யாதெனில், பாரியளவான ஊழலின் மூலம் ஓர் அரசாங்கத்தின் மத்திய செயற்பாடு ஊழலுக்கு இரையாவதுடன், அதன் ஒழுங்கு சீர்கெடும். சிற்றளவு ஊழல் நிலவுகின்ற சமூக மட்டத்தில் தாபிக்கப்பட்ட அமைப்புக்களில் வளர்ந்து தொழிற்படும்.

## ஊழலின் வடிவங்கள்

### இலஞ்சம்

முடிவொன்றின் அல்லது செயலொன்றின் மீது முறைகேடான விதத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்காக அனுகூலமொன்றை ஏற்படுத்துவது இலஞ்சமாகும்.இலஞ்சத்தை எதிர்பார்க்கும் அல்லது பெற்றுக்கொள்ளும் நபரொருவரினால் அல்லது கொடைமுனைவு செய்து பின்னர் வழங்குகின்ற நபரொருவரினால் இது முன்னெடுக்கப்பட முடியும்.

இலஞ்சம் என்பது நன்கு அறியப்பட்ட ஊழலின் பொதுவான வடிவமாகும். இலஞ்சத்தின் மூலம் பெறும் அனுகூலமானது, ஏதேனும் தூண்டுதலை நிஜமாக்க முடியும்: பணம் அல்லது வேறு பெறுமதியானவை, கம்பனிப் பங்குகள், உள்ளகத் தகவல்கள், ஏனைய விருப்புகள், பொழுதுபோக்கு, வேலைவாய்ப்பு அல்லது வேறு ஏதும் ஊக்குவிப்புக்களுக்கான வாக்குறுதிகளாகவும் இருக்கலாம்.

**மோசடி**

ஊழலின் பின்னணியில் வஞ்சகக் கையாளுகையும் மோசடியும் பணம், சொத்து அல்லது வேறு பெறுமதியான பொருள்களை அவற்றிற்குச் சொந்தமில்லாத ஆனால் அவரது பதவி அல்லது வேலைவாய்ப்பின் காரணமாக அவற்றை அணுகக் கூடியதாக உள்ள ஒருவரினால் எடுத்துக்கொள்ளப்படுதல் அல்லது மாற்றப்படுதலாகும்.

சொத்து ஒன்றின் உரிமையாளரை அதனைத் தன்னிச்சையாகக் கைவிடத் தூண்டும் வகையில் உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையாக வழிநடத்தக்கூடிய தகவல்களை உபயோகிப்பதை உள்ளடக்கியதுமாகும்.

**பலாத்காரம்**

இலஞ்சமானது கொடுப்பனவு முறைகள் மற்றும் வேறு விதமான ஊக்குவிப்புகளின் கையாளலில் தங்கியிருக்கும் அதேவேளையில், பலாத்காரமானது அச்சுறுத்தல், அல்லது ஒத்துழைப்பின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வெளிப்படுத்துகை என்பவை போன்ற வற்புறுத்தலில் தங்கியுள்ளது. ஊழலின் ஏனைய வடிவங்களைப் போன்றே இங்கும் பொது அக்கறை அல்லது ஊழலினால் அல்லது முடிவினால் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் பாதிக்கப்பட்டவர்களாகின்றனர்.

**தற்றுணிபின் துஷ்பிரயோகம்**

சில சமயங்களில் தனிப்பட்ட நலன்களுக்காக தற்றுணிபைப் பயன்படுத்திக் கொள்வதும் ஓர் ஊழல் செயற்பாடாகும்.

***<u>உதாரணம்:</u>***

*அரசாங்க நிறுவனமொன்றின் கொள்வனவுச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், தனிப்பட்ட ரீதியில் தன்னுடன் தொடர்புடைய நிறுவனமொன்றிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்.*

*தனக்கு ஆதாயம் பெற வாய்ப்பு இருக்குமாயின் ஆதனங்கள், காணிகளின் அபிவிருத்தி பற்றிய தீர்மானங்களை எடுத்தல்.*

**உறவுச் சார்பு/ நட்புச் சார்பு**

இவ்வடிவத்தில் தற்றுணியின்படியான துஷ்பிரயோகம் பொதுவான பண்பாக விளங்கும். இந்நிலையில் தற்றுணிபு காரணமாகவன்றி, தன்னுடன் தொடர்புடைய (குடும்பத்தின், அரசியல் கட்சியின், இனப் பிரிவின், சமயத்தின், தனது குழுவின்) ஒருவரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக தனது தற்றுணியின்படியான துஷ்பிரயோகம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

***Source:** **Abridged version – United Nations Office on Drugs and Crime, The Global Program against Corruption, UN Anti-Corruption Tool Kit, Third Edition, Vienna, September 2004. "Combating Corruption" - A Training Manual.***

*பின்னிணைப்பு 1*
*பகுதி "ஆ"*

# இன்று வரை தேசிய நேர்மைத்திறன் விருது வென்ற சிலரின் விபரங்கள்

**திரு. துசித பிட்டிகல**

சிரச தொலைக்காட்சி வலையமைப்பின் "விமர்ஷன" ("தேடல்") எனும் புலனாய்வுபூர்வ தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான திரு. துசித பிட்டிகல பாரிய அளவில் இடம்பெற்ற மோசடி நடத்தைகள், அநீதியான செயற்பாடுகள், உயர் அதிகாரிகளின் குற்றச்செயல்கள், அரசியல் குறுக்கீடுகள், பொது உடமைகளின் துஷ்பிரயோகம் போன்ற பல குற்றங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததன் மூலம் அனைவரினதும் பாராட்டைப் பெற்றவர். சில மோசடியான குற்றச் செயல்களை முறியடிப்பதற்கு உரிய வேளையில் நடவடிக்கை எடுப்பதற்காக அரச உத்தியோகத்தர்களைத் தூண்டுவதிலும் வெற்றி கண்டவர். தேசிய இரத்தமேற்றல் வங்கி, காலாவதியான பிளாஸ்மா தொனிகளை பாவிக்கும் விடயத்தை இவர் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்ததன் மூலம் விடயம் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். குறித்த மோசடியான அதிகாரிகளுக்கு எதிராக சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவும் இது வழிவகுத்தது.

**திரு. எஸ்.கே. லியனகே**

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு-1 அதிகாரியான திரு. எஸ்.கே. லியனகே 30 வருட காலம் களங்கமற்ற சேவையாற்றிய ஓர் அரசாங்க அதிகாரியாக நற்பெயர் பெற்று மதிக்கப்படுபவர். ஓர் அரசாங்க உயர் அதிகாரியான இவர், ஜனாதிபதி செயலாளரின் சில தன்னிச்சையான முடிவுகளை எதிர்த்து உயர்நீதிமன்றம் வரை சென்றதுடன், அவற்றை மாற்றியமைக்கத் துணிந்தார். இதன் மூலம் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

**திரு. சரத் சந்திரசிறி மாயாதுன்னே**

கணக்காய்வாளர் நாயகம் திரு. சரத் சந்திரசிறி மாயாதுன்னே கணக்காய்வுச் சேவையைப் பலப்படுத்தியதுடன், மக்கள் நன்குணரக்கூடிய விதமாக அதனை மாற்றியமைத்தவர். புதிய தேசிய கணக்காய்வுச் சட்டமொன்றை அறிமுகப்படுத்திய அவர், சுனாமிக்கு பின்னைய நடவடிக்கைகள் பற்றிய இடைக்கால அறிக்கை ஒன்றையும் 3.6 பில்லியன் ரூபா பெறுமதியான பெறுமதிசேர் வரி மோசடி பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை ஒன்றையும் பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

**திரு. உபனந்த சேனாரத்ன**

அளவைகள், நிறுவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரான திரு. உபனந்த சேனாரத்ன, தனது உயிருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தனது திணைக்களத்தின் ஆய்வுகூடத்தை வேறோர் இடத்திற்கு மாற்றும் குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் முயற்சிக்கு எதிராக துணிந்து செயற்பட்டவர். இப்பிரச்சினையை உயர்நீதிமன்றம் வரை எடுத்துச்சென்றபோதும் தனக்குச் சார்பானதாக தீர்ப்பைப் பெற்றுக்கொண்டபோதும் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கி அதனை எதிர்த்து துணிவுடன் போராடிய அவர், உயர் நீதிமன்றத் தீர்ப்பால் தன் பதவியை மீண்டும் பெற்றுக் கொண்டதுடன், ஓய்வுபெறும் வரையில் பதவி வகித்தார்.

**திரு. லலித் அம்பன்வல**

கணக்காய்வு அத்தியட்சகர் திரு. லலித் அம்பன்வல தன்னைச் சூழ்ந்த அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாமல் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற 40 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு மோசடிச் செயல் பற்றி அம்பலப்படுத்தினார். இதன் காரணமாக, அவர் மீது திராவகம் (அசிட்) வீசப்பட்டு ஒரு கண் பார்வையை இழந்தார். இத்தாக்குதலை எதிர்த்து நாடளாவிய ரீதியில் கணக்காய்வாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

*பின்னிணைப்பு - 2*

## டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் -

## TISL இன் பெறுமானங்கள்

- ✓ வெளிப்படைத்தன்மை
- ✓ வகைகூறல்
- ✓ நேர்மைத்திறன்
- ✓ ஜனநாயகம்
- ✓ ஒருமைப்பாடு
- ✓ நீதி மற்றும் ஒப்புரவு
- ✓ பக்கச் சார்பின்மை
- ✓ துணிவு மற்றும் சகிப்புத்தன்மை

## TISL இன் கொள்கைகள்

- ✓ வலுவூட்டல்
- ✓ வழி செயற்பாட்டியல்
- ✓ உட்படுத்தல் மற்றும் பங்கேற்றல்.
- ✓ எச்சரிக்கை உணர்வை வளர்த்தல்.
- ✓ நடுவுநிலை கோடாமை
- ✓ பராபட்சமின்மை
- ✓ சிறந்த நடைமுறைகளை முன்னேற்றுதல் மற்றும் அங்கீகரித்தல்.
- ✓ நியமங்களை உருவாக்குதல்.

***பின்னிணைப்பு - 3***

தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் குழு
தேசிய நேர்மைத்திறன் விருதுகள் - 2010
ட்ரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா
28/1, புள்ளர்ஸ் ஒழுங்கை
கொழும்பு 07

விருது வழங்கல் குழு அங்கத்தவர்களுக்கு,

**<u>சம்மதத்தை வெளிப்படுத்தும் கடிதம்</u>**

ட்ரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் மூலம் 2010 தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கும் வைபவத்தில் விருதொன்றுக்கு நான் / நாம் பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக எனது / எமது சம்மதத்தை இத்தால் தெரிவிப்பதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம்.

எனது / எமது பிரேரிப்பு இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்படுமாயின், அது தொடர்பாக பகிரங்கப்படுத்துவதற்கு ட்ரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நேர்மைத்திறன் விருது வழங்கல் குழுவுக்கு இத்தால் அதிகாரம் அளிக்கின்றேன்/ அளிக்கின்றோம்.

எனது/எமது பிரேரிப்பில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் ஆராய்ந்து பார்ப்பதற்கு, ட்ரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திற்கு இத்தால் அதிகாரம் அளிக்கின்றேன் / அளிக்கின்றோம்.

பிரேரிப்பொன்றை முன்வைத்தவுடன், பிரேரிப்பு டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் சொத்தொன்றாக அது மாறும் என்பதுடன், பிரேரிக்கப்படுபவரின் குரல், புகைப்படங்களை எவ்வித கட்டணமும் செலுத்தாமல் தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் தொடர்பான விளம்பரங்கள், பிரசாரங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளும் பூரண உரிமை டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்தைச் சாரும். மேலும், விருது வழங்கல் வைபவத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு எந்தவொரு ஊடகங்கள் வாயிலாகவும் அதனை முன்வைப்பதற்கான உரிமை டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திற்கு உண்டு என்பதையும் நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கின்றோம்.

பிரேரிக்கப்பட்டவர் ஒருவர் என்ற வகையில் மேற்போந்த விடயத்துடன் தொடர்புபடாத வேறு ஏதும் ஒரு கருமத்தில் எனது/எமது அறிநிலையும் எழுத்துமூல சம்மதம் தெரிவிப்பும் இன்றி எனது/எமது தனிப்பட்ட தகவல்களை சேகரிப்பதற்கு அல்லது திரட்டி வைத்திருப்பதற்கு டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திற்கு இத்தால் அதிகாரம் அளிக்கவில்லை. தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் குழுவின் பிரேரிப்புகளை மதிப்பீடு செய்யும் கருமங்கள் தொடர்பான விடயங்களுக்கு மாத்திரம் எனது /எமது தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்கு டிரான்பெரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திற்கு அதிகாரம் அளிக்கின்றேன்/அளிக்கின்றோம்.

தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல் பிரேரிப்பு வழிகாட்டல்களின் பிரகாரம் நேர்மைத்திறன் உறுதிப் பிரமாணத்திற்கமைய உறுதிப் பிரமாணம் செய்வதற்கும் எல்லா வேளைகளிலும் உயர்ந்தபட்ச நேர்மைத்திறனின் மதிப்பீட்டை நிறுவுவதற்கும் பொறுப்புடன் பிணைக்கப்பட்டிருக்கின்றேன்/பிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

இவ்வண்ணம் - நம்பிக்கையுள்ள,

....................................

பெயர்:
திகதி:

***பின்னிணைப்பு - 4***

## Transparency International Sri Lanka
## ට්‍රාන්ස්පේරන්සි ඉන්ටනැෂනල් ශ්‍රී ලංකා
## ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா

Integrity Pledge
I,
……………….....………..,
with great determination
pledge to live and serve
as an honourable and incorruptible
Sri Lankan
with a deep sense
of accountability, responsibility and
transparency
in my personal, professional and
occupational life
with the noble purpose of passing on
to future generations
a nation ennobled by Integrity,
dedicating myself as a pioneer in
upholding democratic values,
human rights and duties
unsullied by forces that
impede human and national progress

**සුපිළිපන්න ප්‍රතිඥාව**

සුපිළිපන් දේශයක්
මතු පරපුරට දායාද කිරීමේ
උතුම් පරමාර්ථයෙන්
ප්‍රජාතාන්ත්‍රික වටිනාකම් ද
මිනිස් අයිතිවාසිකම් හා යුතුකම් ද
සුරැකීම වෙනුවෙන්
පුරෝගාමීව කැපවෙමින්
මනුෂ්‍යත්වයට හා රටේ ප්‍රගමනයට
අහිතකර කවර බලවේගයක් අභිමුව වුව
අකම්පිතව
පෞද්ගලික හා වෘත්තීය ජීවිතයේදී
මනා විනිවිද භාවයකින් ද
වගවීමට හා වගකීමට කැප වූ
දෘෂ්ටියකින් ද යුත්
දූසැරියෙන් තොර හරසැරි
ශ්‍රී ලාංකේය පුරවැසියෙකු සේ
අභිමානවත් ලෙස
ජීවත්වන බවට හා සේවය කරන බවට
........................................................... වන මම
දැඩි අධිෂ්ඨානයකින් යුක්තව
ප්‍රතිඥා දෙමි.

நேர்மைத்திறன் சத்தியப் பிரமாணம்
நான்
..............................................................
நேர்மைத்திறன் மிகு தேசமொன்றை
நாளைய சந்ததிக்கு உரித்தாக்கும் உயரிய
நோக்குடன் ஜனநாயக ரீதியான
பெறுமானங்களையும் உரிமைகளையும்
கடப்பாடுகளையும் பாதுகாப்பதற்கு
முன்னோடியாக
விளங்கி அர்ப்பணித்துச் செயலாற்றி
மானுடத்திற்கும்
நாட்டின் முன்னேற்றத்திற்கும் எதிரான
எந்தவொரு ஆதிக்க சக்திக்கு
அடிபணியாமல்
தனிப்பட்ட வாழ்விலும் தொழில் வாழ்விலும்
சிறந்த வெளிப்படைத் தன்மையுடனும்
பொறுப்புணர்வுடனும்
அர்ப்பணிப்புக் கண்ணோட்டத்துடனும்
ஊழலற்ற சிறந்த இலங்கையராக
வாழ்வேன் எனவும் சேவையாற்றுவேன்
எனவும்
திடசங்கற்பம் பூண்டு
உறுதிமொழி பகர்கின்றேன்.

கையொப்பம் :

பெயர் :

திகதி :

*பின்னிணைப்பு - 5*

# பிரேரிப்புப் படிவம்

1. பிரேரிக்கப்படுபவரின்/நிறுவனத்தின் பெயர்:

2. பிரேரணையைச் சமர்ப்பிக்கும் நபரின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் முதலான விபரங்கள்:

3. உமது அபிப்பிராயத்தின் பிரகாரம் குறித்த பிரேரிக்கப்படுபவர் எந்த வகையில் TISL இன் தேசிய நேர்மைத்திறன் விருதைப் பெறுவதற்குப் பொருத்தமானவர் என்பதை விபரிக்கவும். (தயவுசெய்து, வழிகாட்டல் 4 (ii) ஐப் பார்க்கவும்)

**உங்கள் கருத்துக்கள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்ட வடிவத்திற்கமைய எழுதப்பட வேண்டும்.**

i. ஊழல் சம்பவத்தைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தல்.
ii. எதிர்காலத்தில் ஊழலைத் தடுத்து நிறுத்துவதற்கான முன்னுதாரணத்தை வழங்கல்.
iii. தனது அந்தஸ்தையும் மீறி எழும் சவால்களை எதிர்த்துப் போராடுதல்.
iv. ஒரு நிறுவனத்தினால்அல்லது ஒரு தனிநபரினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகுமா?
v. ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு தற்போது இருக்கும் முறைமைகள் பயன்படுத்தப்பட்டனவா அல்லது புது மாதிரியான ஒரு முயற்சியா?
vi. இந்த முயற்சி/ நடவடிக்கை பின்வரும் துறைகளில் மிகக் கூடுதலாக தாக்கம் செலுத்திய துறை எது?
    அ. நிறுவனம்
    ஆ. சமூக அமைப்பு
    இ. தேசம்
    ஈ. சர்வதேசம்
vii. இந்தப் பிரேரிப்பானது தனது பொறுப்பு/ கடமைச் சட்டகத்திற்கு அப்பாற்பட்டு செயலாற்றிய ஒரு தனிநபரைப் பற்றியதா?
viii. அன்றேல், தனக்கிருக்கும் அந்தஸ்து/ தொழிலை உயர்ந்தபட்ச அளவில் பயன்படுத்திக்கொண்டு குறித்த செயலைப் புரிந்த ஒருவர் பற்றியதா?
ix. இந்த நபர், ஏதேனும் பொருளாதார/ தனிப்பட்ட/ பௌதிக/ சமூக/ தொழில் சார்ந்த அர்ப்பணிப்பைப் புரிந்துள்ளாரா?
x. அந்தச் செயல், ஏதேனும் புதிய நடைமுறையை அல்லது சிறந்த நியமத்தை/ சிறந்த திருப்புமுனையை உருவாக்கியுள்ளதா?

4. பிரேரிக்கப்படுபவர், இதற்கு முன்னர் TISL இன் தேசிய நேர்மைத்திறன் விருது/ வேறு ஏதும் விருது வழங்கத் தெரிவுசெய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள்.

5. தயவுசெய்து, பின்வருவனவற்றை வெளிப்படுத்தவும்:

- பிரேரிக்கப்படுபவர், அவருடைய/நிறுவன நேர்மைத்திறன் தொடர்பான ஏதேனும் குற்றம் அல்லது சட்டதை மீறியதற்காக சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளளாரா?
- பிரேரிக்கப்படுபவர், நிறுவனத்திற்கு எதிராக பாக்கியாகவுள்ள வழக்கு விசாரணைகள் / ஒழுக்காற்று சார்ந்த குற்றச்சாட்டுக்கள் உள்ளனவா?
- அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைத் தரவும்.

***விருது வழங்கல் தொடர்பான ஏதேனும் விடயங்களைத் தீர்மானிப்பதற்கான உரிமையை TISL கொண்டிருப்பதுடன் விருது வழங்கல் குழுவின் முடிவு இறுதியானதாகும்.***

## பிரேரிப்புக் கோவையின் ஒழுங்கு:

- பிரேரிப்புப் பத்திரம்
- பிரேரிக்கப்படுபவரின்/நிறுவனத்தின் விபரமான சுயவிபரக்கோவை. (தயவுசெய்து வழிகாட்டல் 4 (i) ஐப் பார்க்கவும்)
- பிரேரிப்புக்கான காரணம் - பிரேரிப்புப் படிவத்தின் இல. 3 தொடர்பில் முன்வைக்கப்படும் விபரம் (தயவுசெய்து பிரேரிப்பு வழிகாட்டல் குறிப்பின் 4 (ii) ஐப் பார்க்கவும்
- பிரேரிக்கப்படுபவரின்/ நிறுவனத்தின் எழுத்துமூல சம்மதம் (தயவுசெய்து வழிகாட்டல் 4 (iii) ஐப் பார்க்கவும்)

  மரணித்த ஒருவரின் பிரேரிப்புக்கு நெருங்கிய குடும்ப அங்கத்தவரின் சம்மதம் வேண்டப்படுகிறது. அத்தகைய நபர் இல்லாதவிடத்து, அடுத்த நிலையிலுள்ள உறவினர் ஒருவரும் சம்மதம் தெரிவிக்கலாம்.
- நேர்மைத்திறன் சத்திய பிரமாணத்தில் பிரேரிக்கப்பட்டவர் கையொப்பம் இட்டுள்ளார். (தயவுசெய்து வழிகாட்டல் 4 (iv) ஐப் பார்க்கவும்)

### மேலதிக தகவல்கள்:

- பத்திரிகை அறிக்கைகள்
- மேலதிக பின்னணித் தகவல்கள்
- தொலைக்காட்சி/ வானொலி நிகழ்ச்சி அறிக்கைகள்
- வேறு ஏதேனும் தொடர்புடைய ஆவணங்கள்/ அறிக்கைகள்
- எவரேனும் உறவினரல்லாத விசாரிக்கக்கூடியவர்கள்.